செ.வெ.எண்.292 நாள்.04.05.2018.

திருநெல்வேலி மாவட்டம், வ.உ.சி. நகர் திட்டப்பகுதியில் ரூ.23.18 கோடி மதிப்பீட்டில் 432 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சியின் மூலம் திறந்து வைத்தார்கள். திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நன்றி தெரிவித்தார்.

--------

திருநெல்வேலி மாநகராட்சி நரசிங்கநல்லூர் பகுதியில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் ரூ.23.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு விழா இன்று (04.05.2018) நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள். திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார். இந்நிகழ்ச்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது—

திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட நரசிங்கநல்லூரில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வ.உ.சி.திட்டப் பகுதியில் ரூ.23.18 கோடி மதிப்பீட்டில் 432 வீடுகளை இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். தண்ணீர், மின்சார வசதியுடன் 393 சதுரஅடி பரப்பளவில் வரவேற்பு அறை, படுக்கை அறை, சமையல் அறை, குளியலறை மற்றும் கழிவறை வசதியுடன் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட கீழத்தெரு, அன்னை இந்திராநகர், செந்தமிழ்நகர், வாகைக்குளம், குமரன்தெரு, தேவிபுரம் மற்றும் சர்தார்புரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த 432 குடும்பங்களில் உள்ள 2500க்கும் மேற்பட்ட நபர்கள் பயன்பெறுகிறார்கள். திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பயனாளிகளின் சார்பிலும், மாவட்ட மக்கள் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், குடிசைமாற்று வாரிய நிர்வாகப் பொறியாளர் திரு.ஜெயசெல்வன், உதவி நிர்வாகப் பொறியாளர் திரு.சுபராஜ், உதவி பொறியாளர்கள் திரு.மாடசாமி, திரு.மஜீத், திருமதி.எழிலரசி, முக்கிய பிரமுகர்கள் திரு.கபரியேல்ராஜன், திரு.சேர்மபாண்டி, திரு.இ.நடராஜன், திரு.முத்துக்குட்டிபாண்டியன் மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி